

கோவையில் தினகரன் நடத்தும் 'மெடி எக்ஸ்போ 2009' என்ற மருத்துவ கண்காட்சியை ஈஷா அறக்கட்டளை நிறுவனர் ஜகி வாசுதேவ் நேற்று தொடங்கி வைத்தார். அருகில் கலெக்டர் உமாநாத், தினகரன் நிர்வாக இயக்குனர் ஆர்.எம்.ஆர்.ரமேஷ்.

## கோவையில் தினகரன் நாளிதழ் நடத்தும்

# 'மெடி எக்ஸ்போ' கண்காட்சி துவங்கியது

### ஆர்வத்துடன் மக்கள் பங்கேற்பு

**கோவை, டிச. 19:** கோவையில் தினகரன் நாளிதழ் நடத்தும் 'மெடி எக்ஸ்போ 2009' மருத்துவ கண்காட்சி நேற்று துவங்கியது

கோவை தினகரன் நாளிதழ் சார்பில் 'மெடி எக்ஸ்போ 2009' என்னும் மாபெரும் மருத்துவ கண்காட்சி கோவை ஸ்ரீராமகிருஷ்ணா திருமண மண்டபத்தில் நேற்று துவங்கியது. நாளை வரை நடைபெறும் இந்த கண்காட்சியில் கோவை மாநகர் மற்றும் புறநகர் பகுதியை சேர்ந்த பிரபல மருத்துவமனைகள், மருத்துவ துறையை சார்ந்த நிறுவனங்கள் 113 அரங்குகள் அமைத்துள்ளன. துவக்கவிழா நேற்று காலை 11 மணிக்கு நடந்தது. தினகரன் நாளிதழின் நிர்வாக இயக்குனர் ஆர்.எம்.ஆர். ரமேஷ் வரவேற்றார். ஈஷா அறக்கட்டளை நிறுவனர் சத்குரு ஜகி வாசுதேவ் கண்காட்சியை குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். கோவை கலெக்டர் டாக்டர் உமாநாத், கோவை அரசு மருத்துவ கல்லூரி டீன் டாக்டர் குமரன் வாழ்த்தி பேசினர்.

கண்காட்சியை பார்வையிட காலையிலேயே ஏராளமானோர் குவிந்தனர். குடும்பத்தோடு மருத்துவ ஆலோசனை பெற்றனர்.

மாலை இலவச யோகா வகுப்புகளை யோகிக் யோகா மைய நிறுவனர் யோகி வி.பி.எஸ்.வாசன் நடத்தினார். விக்ரம் மருத்துவமனை டாக்டர் சரோஜினிதேவி ராஜகோபால், பிளஸ்ஜி மருத்துவமனை மகளிர் நல மருத்துவர் டாக்டர் சித்ரா, பிளஸ்ஜி மருத்துவமனை டாக்டர் ஜி.வேணு பேசினர்.

இன்று காலை 10.30 மணிக்கு உணவு கட்டுப்பாட்டு முறைகள் குறித்து கோவை டயாப் படீஸ் பவுண்டேசன் லட்சுமி பேசுகிறார். 11 மணிக்கு கோவை தி ஐ பவுண்டேசன் மருத்துவமனை டாக்டர் சித்ரா ராமமூர்த்தி கண் நோய் விழிப்புணர்வு குறித்து பேசுகிறார். 11.45 மணிக்கு பாலியல் தொடர்பான சந்தேகங்களுக்கு டாக்டர் லோனப்பன் விளக்கமளிக்கிறார். மதியம் 12.30 மணிக்கு டாக்டர் கண்ணகி உத்திரராஜ் சுற்றுச்சூழலால் ஏற்படும் மகப்பேறின்மை பற்றி பேசுகிறார். மாலை 3 மணிக்கு குப்புசாமி நாயுடு மருத்துவமனை டாக்டர் அமுதா கிரிதர் குழந்தைகள் நலம் பற்றி பேசுகிறார்.

3.45 மணிக்கு எஸ் அண்ட் டி வெல்கேரை சேர்ந்த மகேஷ் உடல் ஆரோக்கியம் குறித்து பேசுகிறார். 4.30 மணிக்கு ஈரோடு சுதா மருத்துவமனையை சேர்ந்த டாக்டர் பிரதீபா குழந்தையின்மை சிகிச்சையில் முழுமையான தீர்வு என்ற தலைப்பில் பேசுகிறார். மாலை 5.15 மணிக்கு ஸ்ரீராமகிருஷ்ணா மருத்துவமனை டாக்டர் குகன் புற்றுநோய் விழிப்புணர்வு குறித்து பேசுகிறார். மாலை 6 மணிக்கு சொல்வேந்தர் சுகிசிவம் உடல், உயிர், உற்சாகம் என்ற தலைப்பில் சொற்பொழிவு ஆற்றுகிறார்.

நாளை காலை 10 மணிக்கு கொழு, கொழு குழந்தைகள் போட்டி நடக்கிறது. மாலை 6 மணிக்கு சிரிப்பு சிகிச்சை என்ற தலைப்பில் சன் டி.வி. புகழ் ஈரோடு மகேஷ் குழுவினர் சிரிப்பு வைத்தியம் அளிக்கின்றனர். மேயர் வெங்கடாசலம், நிறைவுரை ஆற்றுகிறார். கண்காட்சிக்கு அனுமதி இலவசம். தினமும் காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை கண்காட்சியை பார்வையிடலாம். மெடி எக்ஸ்போ 2009 கண்காட்சி நிகழ்ச்சி அனைத்தும் யு டிவியில் நேற்று ஒளிபரப்பு செய்யப்பட்டது.